## பின்னிணைப்பு 1

# கொவிட்-19 காலத்தில் சமூக-பொருளாதாரக் குறிகாட்டி பற்றிய கணிப்பீடு: ஒரு கண்ணோட்டம்

கொவிட்-19 பெருந்தொற்றானது இலங்கை மக்களின் வாழ்வாதாரம், சமூக உறவுகள், சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளைப் பெறுதல் என்பவற்றில் ஏற்படுத்திய தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்குடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணிப்பீட்டு ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதியில் தேசிய மட்டத்தில் ஆய்வொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வின் முக்கிய பகுதியாக விளங்கும் அளவுசார் மூலக்கூறு தொடர்பான விவரங்களை இந்தப் பகுதி விபரிக்கின்றது.

## மாதிரியெடுப்புச் செயல்முறை

இந்த ஆய்விற்காக நாட்டின் 25 மாவட்டங்களிலிருந்து 1000 பங்குபற்றாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் களத் தரவுசேகரிப்பாளர்களால் நேர்க்காணல் செய்யப்பட்டனர். சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் ஆகிய இனக்குழுக்களை முறையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்குபற்றாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். மாதிரித் தெரிவின்போது நகர்ப்புற சமூகத்தினரும் கருத்திற்கொள்ளப்பட்டனர். பகுப்பாய்வு செய்வதற்கு முன்னர், அர்த்தமுள்ள உள்ளகப் பகுப்பாய்வினை மேற்கொள்வதற்காக தேசிய குடிசன நிலையை பிரதிபலிக்கும் வகையில் தரவுகள் நிருவகிக்கப்பட்டன. முடிவுகளானது +/- 2.0% வழுவிற்கு உட்பட்டது.

உள்ளூராட்சி அரசாங்கக் கட்டமைப்பொன்றில் (மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேர சபை) அதிகபட்சமாக 36 நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக கிராம சேவகர் பிரிவொன்றில் அதிகபட்சமாக 6 நேர்காணல்களே நடாத்தப்பட்டன. உள்ளூராட்சி மன்றமானது எழுமாறாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. கள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய கிராம சேவையாளர் பிரிவு மற்றும் ஆரம்பிக்கவேண்டிய இடம் என்பவற்றை களத்

தரவுசேகரிப்பாளர்களே தெரிவுசெய்வர். குடும்பங்கள் "வலது கை விதி" மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அவற்றினது குடும்பத்தலைவரே பதிலளிப்பவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## வினாக்கொத்து

கொவிட் நெருக்கடியைத் தணிப்பதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் மீதான திருப்திநிலை, ஆட்களை நியாயமாக நடாத்துதல், சமூகங்களுக்கிடையிலான உறவுகள், விழிப்புணர்வு, கொவிட்-19 பெருந்தொற்று பற்றிய தகவல்களின் மூலங்கள், நிதி நெருக்கடிகளைச் சமாளிக்க பிரயோகிக்கும் உத்திகள், கல்வி, சுகாதார சேவைகளைப் பெறுதல் தொடர்பான பொதுமக்களின் கண்ணோட்டத்தை அறிவதற்காக அரை-கட்டமைப்பு வினாக்கொத்தினைப் (Semi-structured questionnaire) பயன்படுத்தி நேர்காணல்கள் நடாத்தப்பட்டன.

கணிப்பீட்டுக்கான வினாக்கொத்து ஆங்கிலத்தில் வடிவமைக்கப்பட்டு சிங்களம் மற்றும் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டது. மொழியின் தெளிவு, கேள்விகளின் ஒழுங்கு மற்றும் பதில் வகைகளின் பொருத்தம் ஆகியவற்றைச் சோதனைச் செய்யும் வகையில் சிரேஷ்ட கள ஆய்வாளர்கள் குழுவினால் பிரதான ஆய்விற்கு முன்னர் சிங்களம் மற்றும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலான பதிலளிப்பவர்களைக் கொண்டு ஒரு பரிசோதனை ஆய்வு நடாத்தப்பட்டது. இப்பரிசோதனை ஆய்வில் விளங்கிக்கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, வினாக்கொத்து மேலும் நேர்த்தியாக்கபட்டது.

## கள ஆய்வு

இந்த ஆய்வில் ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 71 களத் தரவுசேகரிப்பாளர்கள் பங்கேற்றனர். ஆய்வுக் குழுவினரால் ஆய்வு, வினாக்கொத்து, களத்தில் பின்பற்றவேண்டிய நுட்பங்கள் குறித்த விரிவான பயிற்சியொன்று களத் தரவுசேகரிப்பாளர்களுக்கு அளிக்கப்பட்டன. நேர்காணல்களானவை, பதிலளிப்பவர் மற்றும் களத் தரவுசேகரிப்பாளர்கள் ஆகிய இருவரினதும் தாய்மொழியில் நடாத்தப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவின் தரத்தை உறுதிசெய்வதற்காக, கள ஆய்வு இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போதும் அது முடிவடைந்த பின்னரும் கள மேற்பார்வை விஜயங்கள் மற்றும் மீள்சோதனைகள் என்பன இடம்பெற்றன. 2021 பெப்ரவரி - மார்ச் வரை தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.